<u>சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்</u>

**<u>OS.No. 1386 / 2022</u>**

வா.சா.1. லதா 29.08.2024

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 3, 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:

சொத்தில் பாகம் வேண்டும் என்று நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. எவ்வளவு விஸ்தீரணம் என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கு சொத்தின் நான்குமால் எனக்கு தெரியாது. இந்த வழக்கு சொத்தை 3-ம் பிரதிவாதி கிருஷ்ணசாமி அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். நான் கடந்த 30 ஆண்டுகளாக வழக்கு சொத்தில் அனுபவத்தில் இருந்து வந்ததில்லை என்றால் சரிதான். எதன் அடிப்படையில் வழக்கு சொத்தில் பாதை கேட்டுள்ளேன் என்றால் வழக்கு சொத்தில் எனது அம்மாவின் பங்கில் எனக்கு பாக உரிமை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எந்த ஆவணத்தின் அடிப்படையில் எனது அம்மாவிற்கு பங்கு வரும் என்றால் எனது தாத்தாவின் சொத்து என்பதால் எனது அம்மாவிற்கு அதில் பாக உரிமை உள்ளது. அதனால் நான் பாகபிரிவினை வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் சொத்து சுவாதீனத்தில் இல்லாத காரணத்தினால் தவறான நீதிமன்ற கட்டணச் சட்டத்தின் படி தாவாவை மதிப்பிட்டு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இந்த தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. நான் குறைவான நீதிமன்ற கட்டணம் கட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. 12.08.1963-ம் தேதிய பாக பிரிவினை ஆவணத்தின் படி எனது அம்மாவிற்கு பாகம் வரும் என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வழக்கு சொத்தை வில்லங்கம் எடுத்து பார்த்தேனா என்றால் இல்லை. 12.08.1963-ம் தேதி பொதுகுடும்ப பாக பிரிவினைக்கு பின்னிட்டு 19.08.1987-ல் ஒரு பாக பிரிவினை நடந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 19.08.1987-ம் தேதிய பாக பிரிவினையில் நாச்சிமுத்துக்கவுண்டருக்கும் 3-ம் பிரதிவாதிக்கும் “ஏ” பாக சொத்துக்களும் 2, 5 பிரதிவாதிகளுக்கு “பி” பாக சொத்தாகவும் பாக பிரிவினை செய்து கொண்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நாச்சிமுத்துக்கவுண்டரும் 3-ம் பிரதிவாதியும் “ஏ” பாக சொத்தான தாவா சொத்தை அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். 3-ம் பிரதிவாதி கிருஷெண்சாமி தான் அவரது தந்தை நாச்சிமுத்துகவுண்டரை வைத்து பராமரித்து வந்தார் என்றால் சரிதான். நாச்சிமுத்துக்கவுண்டர் இறப்பதற்கு முன்பு 20.12.2017-ம் தேதியில் தனக்கு பாத்தியப்பட்ட வேறு பாதி சொத்தினை 3-ம் பிரதிவாதிக்கு ஒரு உயில் எழுதி வைத்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது தாத்தா நாச்சிமுத்துக்கவுண்டர் கடந்த 24.06.2017-ம் தேதி இறந்துவிட்டார் என்றால் சரிதான். நாச்சிமுத்துக்கவுண்டர் இறந்த பிறகு அவர் எழுதி வைத்த மேற்படி தேதிய உயில் நடைமுறைக்கு வரப்பட்டு தாவா முழுச்

சொத்தையும் 3-ம் பிரதிவாதி கிருஷ்ணசாமி தான் தற்போது வரை அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். எனக்கு திருமணம் நடைபெற்று 29 வருடம் ஆகிறது. என்னை பழனியில் திருணம் செய்து கொடுத்தார்கள். நான் கடந்த 29 ஆண்டுகளாக பழனியில் தான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். நான் வழக்கு சொத்திற்குள் தற்போது வரும் இல்லை, போவதும் இல்லை என்றால் சரிதான். எனது தந்தை வேலுச்சாமியால் எனது அம்மா நாச்சம்மாள் 40 ஆண்டுகளுக்கு முன்பு கொலை செய்து விட்டார் என்றால் சரிதான். அது எனது அப்பாவிற்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்ட முழுவிசாரணைக்கு பின்னிட்டு மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் எனது அப்பா மீதான குற்றம் ஊர்ஜிதம் செய்யப்பட்டு அதன் பேரில் ஆயுள்தண்டனை வழங்கப்பட்டது என்றால் சரிதான். அதன்பின்னிட்டு எனது தாத்தா நாச்சிமுத்துக்கவுண்டர் மற்றும் 3-ம் பிரதிவாதி கிருஷ்ண்சாமி ஆகியோர் தான் தாவா எங்களை பராமரித்து வந்தார்கள் என்றால் சரிதான். அதில் எனது தாத்தாவும் 3-ம் பிரதிவாதியும், எனது பாட்டியும் சேர்ந்து தான் எனக்கு திருமணம் செய்து வைத்தார்கள் என்றால் சரிதான். கடந்த 19.08.1987-ம்தேதியில் ஏற்பட்ட பாக பிரிவினையில் எனது தாத்தா நாச்சிமுத்துக்கவுண்டருக்கு “ஏ” பாக சொத்துக்கள் கிடைக்கப்பெற்ற பேர் பாதி சொத்தினை பொறுத்து அவரது மகனான 3-ம் பிரதிவாதிக்கு கடந்த 20.02.2017-ம் தேதிய உயில் சாசனம் மூலமாக பாத்தியப்படுத்தி கொடுத்து எனது தாத்தா இறந்த பிறகு அந்த உயில் நடைமுறைக்கு வந்துவிட்டதாலும் நான் தாவா சொத்துக்களை பொறுத்து தாக்கல் செய்துள்ள இந்த பாக பிரிவினை வழக்கு செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. 1 முதல் 6 பிரதிவாதிகளுக்கு வழக்குசொத்தில் பாகம் கிடைப்பதாக நான் எனது வழக்குரையில் சொல்லியுள்ளது தவறு என்றாலும் 3-ம் பிரதிவாதிக்கு மட்டுமே வழக்கு சொத்து முழுபாத்தியப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு எந்த வழக்குமூலம் கிடையாது என்றால் சரியல்ல. வழக்குரையில் நான் குறிப்பிட்ட சொத்துவிபரம் தவறு என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தில் எனக்கு எந்தவித பாகமும் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. 3-ம் பிரதிவாதியிடம் இருந்த பணம் பரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தான் இந்த பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

M DHANABAL

Digitally signed by M DHANABAL
Date: 2024.08.29 17:48:53 +0530

சார்பு நீதிபதி

ஓட்டன்சத்திரம்